**<u>சார்பு நீதிமன்றம், திருவாரூர்</u>**

முன்னிலை- **திரு.G.கிருஷ்ணன், B.A., L.L.B., ,**

**சார்பு நீதிபதி, திருவாரூர்.**

2024-ம் ஆண்டு ஜூலை மாதம் 09-ம் நாள் செவ்வாய்கிழமை.

(திருவள்ளுவராண்டு 2055, ஸ்ரீ குரோதி வருடம், ஆனி திங்கள் 25 ஆம் நாள்)

**<u>அசல் வழக்கு எண்.104/2023</u>**

**(CNR.NO.TNTV03-000807-2023)**

தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி,
திருவாரூர் கிளை, அதற்காக
அதன் கிளை மேலாளர். ... வாதி.

.. எதிர் ..

1. R.விக்னேஷ்
2.T.கீதா ... பிரதிவாதிகள்

- - -

இவ்வழக்கு இன்று 09.07.2024 ஆம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ஸ்ரீநிவாசரத்தினம் அவர்கள் ஆஜராகியும், அழைப்பாணை பெற்றுக் கொண்ட பிரதிவாதிகளை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகததாலும், அவருக்காக யாரும் முன்னிலையாகாததாலும் கடந்த 12.02.2024 ஆம் தேதி இத்தாவாவில் ஒருதலைப்பட்ச உத்தரவுக்கு உள்ளாக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரையைக் கேட்டும், சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் சீரான ஆய்வில் இருந்து வந்து, இன்றே இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் தாவா தொகை ரூ.7,43,572/- யும், மேற்படி தொகைக்கு, தாவா தாக்கலான தேதி முதல் தொகை முழுவதும் செல்லாகும் வரை 14.10% ஆண்டு பின்வட்டியும் மற்றும் தாவா செலவுத் தொகையும் செலுத்த உத்தரவிட்டு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டி, வாதியால் இத்தாவா.

**2. <u>தாவா வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு</u> :-**

i) இந்திய நிறுவன சட்டத்தின் கீழ், வாதியான தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி பொது வரையறை நிறுவனமாக நிறுவப்பட்டு, அதன் பதிவு அலுவலகம் தூத்துக்குடியில் உள்ளது. அதன் திருவாரூரில் உள்ள கிளை அலுவலகத்தில், 1 ஆம் பிரதிவாதியின் I.T. (B.Tech), பட்ட படிப்பிற்காக ரூ.2.97,000/- னை கல்விக்கடனாக கோரி கடந்த 14.02.2018 ஆம் தேதி விண்ணப்பித்திருந்தார். மேற்படி கடனை கடந்த 29.09.2015 ஆம் தேதி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. அன்றே, வங்கியின் நிபந்தனைகளையும், மாதம் ஒன்றுக்கு ரூ.3,536/- வீதம் 14.10% ஆண்டு வட்டியுடன் 84 மாத சமத்தவணைகளில், கடந்த 29.04.2020 முதல் திரும்ப செலுத்துவதாகவும், ஏதாவது 1 மாத தவணை செலுத்த தவறினால் உடனடியாக மொத்த கடன் தொகையை வசூலிக்க வாதியின் வங்கிக்கு உரிமை உண்டு என்பதனையும் ஒப்புக்கொண்டு, 1 ஆம் பிரதிவாதியுடன் இணைந்து, மேற்படி கடனுக்கு கூட்டாகவோ மற்றும் தனித்தனியாகவும், 1 ஆம் பிரதிவாதியின் தாயாரான 2 ஆம் பிரதிவாதி இணைபொறுப்பாளர் என்ற அடிப்படையிலும், 1 ஆம் பிரதிவாதியின் தந்தை ராஜாங்கம் பிணையதாரர் என்ற அடிப்படையிலும், வாதியின் வங்கிக்கு கடனுறுதிச்சீட்டு, உடன்பாட்டு விதிகள் (Articles of Agreement) உள்ளிட்ட ஆவணங்களை ஏற்படுத்திக்கொடுத்தனர்.

ii) அதன் அடிப்படையில் கடன் பெற்ற பிரதிவாதிகள் மேற்படி கடனை ஒப்புக்கொண்டபடி திரும்ப செலுத்தவில்லை. பிணையதாரர் இறந்து விட்டார். கடன் நிலுவைத்தொகையை ஒப்புக்கொண்டு பிரதிவாதிகள் கடந்த 04.07.2018 மற்றும் 28.05.2021 ஆகிய தேதிகளில் கடன் உயிர்ப்பிப்பு கடிதங்களை வாதியின் வங்கிக்கு ஏற்படுத்தி கொடுத்துள்ளனர். கடந்த 30.01.2021 ஆம் தேதிய கடன் கணக்குபடி நிலுவைத் தொகை ரூ.6,43,093.39 என்பதனை ஒப்புக்கொண்டு உறுதிபடுத்துதல் கடிதத்தினையும் வாதியின் வங்கிக்கு பிரதிவாதிகள் ஏற்படுத்தி கொடுத்தனர். பலமுறை கோரியும் மற்றும் 29.07.2023 ஆம் தேதிய பதிவு அறிவிப்புக்கு பின்னிட்டும் கடன் தொகையை, பிரதிவாதிகள் திரும்ப செலுத்தவில்லை. கடந்த 30.09.2023 ஆம் தேதிய கடன் கணக்கு பட்டியல் படி வாதியின் வங்கிக்கு ரூ.7,29,205.39/- னை பிரதிவாதிகள் வாதியின் வங்கிக்கு செலுத்த வேண்டியுள்ளது. அதன் பின்னிட்டு தாவா தாக்கல் செய்த நாள் வரை உண்டான வட்டியுடன் பிரதிவாதிகள் ரூ.7,43,572/- னை வாதியின் வங்கிக்கு செலுத்த கடமைப்பட்டவர்கள். எனவே தாவா பரிகாரங்கள் கோரி வாதி வங்கியின் மேலாளர் மற்றும் பொது அதிகார முகவர் மூலமாக இத்தாவா.

**3.** இத்தாவா சம்பந்தமாக அழைப்பாணையை பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் அழைத்த போது ஆஜராகவில்லை. அவர்களுக்காக யாரும் முன்னிலையாகவில்லை. எனவே, கடந்த 12.02.2024 ஆம் தேதி இத்தாவாவில் பிரதிவாதிகள் ஒருதலைப்பட்ச உத்தரவுக்கு உள்ளாகியுள்ளனர்.

**4**. இத்தாவா சம்பந்தமாக வாதி தரப்பில் அதன் கிளை மேலாளர் திரு. கௌதமன் என்பவரை வா.சா.1 ஆக முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டு, வா,சா.ஆ.1 முதல் 13

வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. **இத்தாவாவில் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்று தீர்மானிக்க வேண்டியது இத்தாவாவில் உள்ள பிரச்சினை ஆகும்**:-

i). வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட வா.சா.1 தாவா வழக்குரை சங்கதியை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.1 ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் 13 வரையிலான சான்றாவணங்கள் ஆகியவைகளை கவனமாக இந்நீதிமன்றத்தால் பரிசீலனை செய்யப்பட்டது.

ii). திருவாரூரில் உள்ள வாதி வங்கிக்கிளையில், 1 ஆம் பிரதிவாதியின் I.T. (B.Tech), பட்ட படிப்பிற்காக ரூ.2.97,000/- னை கல்விக்கடனாக கோரி கடந்த 14.02.2018 ஆம் தேதி வா.சா.ஆ.2 ஆன கடன் விண்ணப்பத்தினை கொடுத்துள்ளனர். மேற்படி கடனை கடந்த 29.09.2015 ஆம் தேதி வழங்க வாதியின் வங்கியால் வா.சா.ஆ.3 ஆன கடன் அனுமதி கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அன்றே, வாதி வங்கியின் நிபந்தனைகளையும், மாதம் ஒன்றுக்கு ரூ.3,536/- வீதம் 14.10% ஆண்டு வட்டியுடன் 84 மாத சமத்தவணைகளில் கடந்த 29.04.2020 முதல் திரும்ப செலுத்துவதாகவும், ஏதாவது 1 மாத தவணை செலுத்த தவறினால், உடனடியாக மொத்த கடன் தொகையை வசூலிக்க வாதியின் வங்கிக்கு உரிமை உண்டு என்பதனையும் ஒப்புக்கொண்டு, 1 ஆம் பிரதிவாதியுடன் இணைந்து, மேற்படி கடனுக்கு கூட்டாகவோ மற்றும் தனித்தனியாகவும், 1 ஆம் பிரதிவாதியின் தாயாரான 2 ஆம் பிரதிவாதி இணைபொறுப்பாளர் என்ற அடிப்படையிலும், 1 ஆம் பிரதிவாதியின் தந்தை ராஜாங்கம் பிணையதாரர் என்ற அடிப்படையிலும், வாதியின் வங்கிக்கு வா.சா.ஆ.4 ஆன

கடனுறுதிச்சீட்டு, வா.சா.ஆ.5 ஆன உடன்பாட்டு விதிகள் (Articles of Agreement), வா.சா.ஆ.6 ஆன பொறுப்புறுதிபத்திரம் ஆகிய ஆவணங்களை ஏற்படுத்திக்கொடுத்து கடன் பெற்றனர் என்பவைகள் புலனாகின்றது. அதன் பின்னிட்டு வாதியின் வங்கி பலமுறை கோரியும் மற்றும் வா.சா.ஆ.10 ஆன 29.07.2023 ஆம் தேதிய பதிவு அறிவிப்பினை பிரதிவாதிகளுக்கு அனுப்பியும், அதனை பெற்றுக்கொண்ட பின்னிட்டும் கடன் தொகையை, பிரதிவாதிகள் திரும்ப செலுத்தவில்லை என்பது வா.சா.ஆ.10 முதல் 12 வரையிலான சட்ட அறிவிப்பு மற்றும் அஞ்சலக ஒப்புகை அட்டைகள் ஆகியவைகளை பரிசீலனைக்கையில் பிலனாகின்றது. மேலும், வா.சா.ஆ.7 மற்றும் 8 ஆன கடன் உயிர்பிப்பு கடிதங்கள், வா.சா.ஆ.9 ஆன கடன் நிலுவையை ஒப்புக்கொண்டு பிரதிவாதிகளால் ஏற்படுத்திக்கொடுத்த உறுதி செய்தல் கடிதம் ஆகியவைகளை பரிசீலனைக்கையில் தாவா கடன் கால வரம்பு தோஷத்தால் பாதிக்கப்படவில்லை என்பது புலனாகின்றது. வா.சா.ஆ.13 ஆன கடன் கணக்கு படடியல் படி தாவா தொகையினை பிரதிவாதிகள் திரும்ப செலுத்த வேண்டியுள்ளது என்பது புலனாகின்றது. மேலும் இத்தாவா தாக்கல் செய்ய வாதியின் கிளை மேலாளருக்கு வா.சா.ஆ.1 ஆன பொது அதிகார பத்திரம்மூலம் வாதியின் வங்கியால் அதிகாரம் வழங்கப்பட்டதும் புலனாகின்றது.

iii) தாவா வழக்குரைக்கப்பட்ட சங்கதிகள், வாதி தரப்பில் வா.சா.1 ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் 13 வரையிலான சான்றாவணங்கள் மூலம், மேற்கண்ட சூழ்நிலையில் நிரூபணம் செய்யப்பட்டிருப்பதாக இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது. எனவே, தாவா தொகை ரூ.7,43,572/- யும், அசல் கடன் தொகை ரூ.2,97,000/-க்கு இத்தாவா தாக்கலான தேதி முதல் இத்தீர்ப்பாணை தேதி வரை 9% ஆண்டு பின்வட்டியும், இத்தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை முழுவதும் செல்லாகும் வரை 6% ஆண்டு பின்வட்டியும், மற்றும் தாவா செலவுத்

தொகையையும் பிரதிவாதியிடமிருந்து வசூலிக்கும் தீர்ப்பாணை பரிகாரத்தினை வாதி பெறத்தக்கவர் என முடிவு கண்டு இத்தாவாவின் பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

**முடிவில்,**

**வாதிக்கு பிரதிவாதிகள் கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ தாவா தொகை ரூ.7,43,572/- யும், அசல் கடன் தொகை ரூ.2,97,000/-க்கு இத்தாவா தாக்கலான தேதி முதல் இத்தீர்ப்பாணை தேதி வரை 9% ஆண்டு பின்வட்டியும், இத்தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை முழுவதும் செல்லாகும் வரை 6% ஆண்டு பின்வட்டியும், தாவா செலவுத் தொகையும் செலுத்த வேண்டும் என உத்தரவிட்டு இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. தொகை செலுத்த கால அவகாசம் இன்றைய தேதியிலிருந்து (2) மாதங்கள்.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2024 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 09 ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
DN: cn=G KRISHNAN, ou=NAMAKKAL, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN
Date: 2024.07.09 12:05:28 +0530

சார்பு நீதிபதி
திருவாரூர்.

**வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் :-**

வா.சா.1 திரு. கௌதமன்(வங்கி கிளை மேலாளர்)

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :-**

| வ.எண். | தேதி | விபரம் | ஷரா |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 20.01.2012 | வாதி வங்கியின் சார்பாக வழக்கு நடவடிக்கை மேற்கொள்ள எனக்கு வாதி வங்கியால் வழங்கப்பட்ட பொது அதிகார பத்திரம் | நகல் |
| வா.சா.ஆ.2 | 14.09.2015 | பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு கொடுத்த கடன் விண்ணப்பம் | அசல் |
| வா.சா.ஆ.3 | 29.09.2015 | வாதி வங்கியின் கடன் அனுமதி கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.4 | 29.09.2015 | 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு எழுதி கொடுத்த கடனுறுதிச்சீட்டு | அசல் |
| வா.சா.ஆ.5 | 29.09.2015 | 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு எழுதி கொடுத்த ஒப்ப்ந்தப்பத்திரம் | அசல் |
| வா.சா.ஆ.6 | 29.09.2015 | 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு எழுதி கொடுத்த பொறுப்புறுதிப் பத்திரம் | அசல் |
| வா.சா.ஆ.7 | 04.07.2018 | 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு எழுதி கொடுத்த கடன் உயிர்ப்பிப்பு கடிதங்கள் | அசல் |
| வா.சா.ஆ.8 | 28.05.2021 | 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு எழுதி கொடுத்த கடன் உயிர்ப்பிப்பு கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.9 | 30.09.2022 | பிரதிவாதிகள் வாதி வங்கியின் கடன் நிலுவைத்தொகையை ஒப்புக் கொண்டு | அசல் |

| | | | |
|---|---|---|---|
| | | எழுதிக்கொடுத்த கடன் ஒப்புகை உறுதிக்கடிதம் | |
| வா.சா.ஆ.10 | 29.07.2023 | வாதி வங்கி பிரதிவாதிகளுக்கு கொடுத்த சட்ட அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.11 | 02.08.2023 | மேற்படி சட்ட அறிவிப்பை 1 ஆம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை | அசல் |
| வா.சா.ஆ.12 | 02.08.2023 | மேற்படி சட்ட அறிவிப்பை 2 ஆம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை | அசல் |
| வா.சா.ஆ.13 | --- | வாதி வங்கியில் 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் வாங்கிய கடன் கணக்கு பட்டியல் | கணினி நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** :- - இல்லை -

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
DN: cn=G KRISHNAN, ou=NAMAKKAL, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN
Date: 2024.07.09 12:05:36 +0530

சார்பு நீதிபதி,

திருவாரூர்.